[1977 ஆகஸ்ட் 5

திரு. வி. கே. கோதண்டராமன்: தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இவைகளில் ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு 'தினத்தந்தி' பத்திரிகையிலும் 50 சதவீதம் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். 'மாலைமுரசு' பத்திரிகையில் இதுவரை கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஒரு தேசிய பத்திரிகை. 100 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்ற பத்திரிகை. அந்தப் பத்திரிகையும் மூடும் தருவாயில் இருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு விவரங்கள் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பர்மா அகதிகள்.

* 20 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1977 ஜனவரி முடிய தமிழ்நாட்டில் குடியேறிய பர்மா அகதிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: 1977 ஜனவரி முடிய 1,43,463 பர்மா அகதிகள் தமிழ்நாட்டில் குடியேறியுள்ளனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களை மீட்டுக் கொடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். அதைத் தொடர்ந்து பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு வழிவகை காண இந்த அரசு முன்வருமா?

1977 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அந்தப் பிரச்னை பற்றி முன்பு இருந்த அரசும் முயற்சி செய்தது எல்லோருக்கும் தெரியும். மேலும் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இதுபற்றி பேசுவதற்கு முயன்று கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து குடியேறிய இந்த அகதிகளுக்கு என்ன வேலைவாய்ப்பு இந்த அரசு கொடுத்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை பர்மாவிலே இருந்து இங்கு வந்த 42,179 குடும்பங்களுக்கு வணிகக் கடன் என்கின்ற முறையிலே 41,695 குடும்பங்களுக்கும், காலனி திட்டத்தின்கீழ் 375 குடும்பங்களுக்கும், நூற்பு ஆலைகளிலே 109 குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, பர்மா மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து வந்த அகதிகளுக்கு அரசாங்கம் வியாபாரம் செய்வதற்காகப் பணம் கொடுத்து வந்தது. பாதி கொடுக்கப்பட்டு, பாதி நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மேலும் மத்திய அரசாங்கம் கொடுத்த ரி-இம்பர்ஸ்மென்ட் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் பெறுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சிக்குமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இந்த வியாபார சம்பந்தமாக அரசு கொடுத்த கடனில் முதல் தவணை கொடுக்கப்பட்டது. பிறகு அதிலே சில தவறுகள் ஏற்பட்டதால், எந்த நோக்கத்தோடு கொடுக்கப்பட்டதோ, அது நிறைவேற்றப்படாத காரணத்தால், இரண்டாவது தவணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து ரி-இம்பர்ஸ்மெண்ட் தொகை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 21 ஆம் கேள்வியையும், இதோடு சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. வடிவேலு: கடந்த 1974-75 ஆம் ஆண்டிலே இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு குடியேறிய அகதிகள் எத்தனை பேர்? அவர்களுக்கு கடந்த கால அரசு என்னென்ன நன்மைகள் செய்தது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி என்று சொன்னீர்கள். அடுத்த கேள்விக்குப் பதில் சொன்னால், அதன்மேல் துணைக் கேள்விகள் கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியின் பதிலும் இதனுடன் தொடர்புள்ளதாகத்தான் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: அமைச்சர் அவர்கள் பர்மா அகதிகளைப்பற்றி விடை அளித்திருக்கிறார்கள். இலங்கை அகதிகளைப்பற்றி இன்னும் பதில் அளிக்கவில்லை. எனவே, அடுத்த கேள்விக்கும் விடை அளித்தால், துணைக் கேள்விகள் கேட்பதற்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகளைப்பற்றிய கேள்வி 21-க்கும் பதில் சொல்லவும்.

இலங்கை அகதிகள்.

*21 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1976, 1977 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குடியேறிய இலங்கை அகதிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: 1976-ல் 45,327 நபர்கள் அடங்கிய 10,977 குடும்பங்களும், 1977-ல் (9—7—1977 முடிய) 26,944 நபர்கள் அடங்கிய 6,702 குடும்பங்களும் தமிழ்நாட்டில் குடியேறினர்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த பர்மா அகதிகளுக்கும், தகுதிவாய்ந்த இலங்கை அகதிகளுக்கும் நபர்கள் அடங்கிய 10,977 குடும்பங்களும், 1977-ல் (9—7—1977 அரசுத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை அளிப்பதற்கான யோசனையை இந்த அரசு மேற்கொள்ளுமா?